# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்),**
**தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590**

**<u>ஆணை நாள்: 04.11.2020</u>**

**<u>முன்னிலை</u>**

**திரு. ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

..............

**<u>வழக்கு எண். SA3830/F/2020</u>**

**திரு கு.பாலதண்டபாணி ... மேல்முறையீட்டாளர்**

**/ எதிர் /**

**பொதுத் தகவல் அலுவலர்/ கிளை மேலாளர்,**
**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்**
**(கோயம்புத்தூர்) லிமிடெட்,**
**எண்.37, மேட்டுப்பாளையம் சாலை,**
**கோயம்புத்தூர் - 642 043. ... பொது அதிகார அமைப்பு**

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | **06.02.2020** |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | **19.03.2020** |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | **05.05.2020** |

******

**<u>ஆணை</u>**

இவ்வழக்கு தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாத காரணத்தால் இன்று (04.11.2020) தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மேல்முறையீட்டாளர் திரு கு.பாலதண்டபாணி மற்றும் திரு.பிரபு, பொதுத் தகவல் அலுவலர்/ கிளை மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், (கோயம்புத்தூர்) லிமிடெட், எண்.37, மேட்டுப்பாளையம் சாலை, கோயம்புத்தூர் ஆகியோர் பங்கேற்றனர்.

2. மேல்முறையீட்டாளர் 06.02.2020 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், கோவை கோட்டத்தில் உள்ள அனைத்து மண்டல

கிளைகளிலும் 01.01.2019 முதல் 30.12.2019 வரை யார் யாரை எந்தக் கிளைகளுக்கு என்ன காரணத்திற்காக வேறு கிளைகளுக்கு பணியிடம் மாறுதல் மற்றும் புகார்களின் பேரில் மாறுதல் உத்தரவு செய்யப்பட்டது என்ற சான்றிட்ட தகவல், கோவை கோட்டத்தில் உள்ள ஈரோடு, திருப்பூர், ஊட்டி கோவை மண்டலங்களில் உள்ள ஒவ்வொரு கிளைகளிலும் உள்ள 21.12.2018 முதல் 20.12.2019 வரை பணிக்கு வராமை (Affect) ஒவ்வொரு மாதமும் எத்தனை நாட்கள் ஓட்டுநர்களுக்கும், நடத்துனர்களுக்கும், தொழில்நுட்பப்பணியாளர்களுக்கும் (Affect) போடப்பட்டது என்ற தெளிவான சான்றிட்ட தகவல், அரசு போக்குவரத்துத்துறை கடித எண்.9663/சி1/2019 நாள்.09.10.2019 அறிக்கையின் நகல், கோவை கோட்டம் அதன் மண்டலம் மற்றும் அதன் ஒவ்வொரு கிளைகளில் இருந்தும் 01.01.2020-ம் தேதிய நிலையில் அதிகமாக மற்றும் பற்றாக்குறையாக உள்ள ஓட்டுநர்கள், நடத்துனர்கள், தொழில்நுட்பப்பணியாளர்கள் கிளைகள் வாரியாக விவரம் ஆகிய தகவல்களை வழங்கக்கேட்டு, பொதுத் தகவல் அலுவலர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை) லிமிடெட், எண்.37, மேட்டுப்பாளையம் சாலை, கோயம்புத்தூர் என விலாசமிட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் தகவல் ஏதும் வழங்காததால் மேல்முறையீட்டாளர் 19.03.2020 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர்/ நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், எண்.37, மேட்டுப்பாளையம் சாலை, கோயம்புத்தூர் அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தகவல் வழங்காததால், தான் கோரிய தகவலை வழங்க உத்தரவிடுமாறு கோரி மேல்முறையீட்டாளர் 05.05.2020 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (04.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் தொலைபேசி வாயிலாக ஆஜராகி, தனக்கு பொதுத் தகவல் அலுவலர் 31.10.2020 தேதியிட்டு தகவல் வழங்கியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவல் திருப்தியற்ற தகவலாக இருப்பதால் சரியான தகவலை பெற்று வழங்குமாறும், தனக்கு நேரடி விசாரணை தேவை எனவும் ஆணையத்தைக் கேட்டுக்கொண்டார்.

5. இன்றைய விசாரணையில் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளர் கோரிய தகவல்களை திரட்டி வழங்க சிறிதுகால அவகாசம் வேண்டுமென ஆணையத்தைக் கேட்டுக்கொண்டார்.

6. மேல்முறையீட்டாளரின் மனுவையும், பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவலையும் இணைத்து பரிசீலனை செய்கையில் மேல்முறையீட்டாளருக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்பது தெரிகிறது. எனவே இன்றைய விசாரணையின் முடிவில் ஆணையம் கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கிறது:-

- மேல்முறையீட்டாளர் 06.02.2020 தேதியிட்டு கோரிய தகவலுக்கு பொதுத் தகவல் அலுவலர் வழங்கியிருக்கும் தகவல் திருப்தியற்ற தகவலாக இருப்பதால் முழுமையான மற்றும் விரிவான தகவலை **இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)ன்படி கட்டணமின்றி மேல்முறையீட்டாளருக்கு முழுமையான தகவல்களை அனுப்பிவைத்து, மேல்முறையீட்டாளர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து**

இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடுகின்றது.

- மேலும் தனக்கு மேல்முறையீட்டாளர் நேரடி விசாணை தேவை என ஆணையத்தைக் கேட்டுக்கொண்டதற்கிணங்க மேல்முறையீட்டாளரின் கோரிக்கையினை ஆணையம் ஏற்று இவ்வழக்கின் விசாரணை பிறிதொரு தேதிக்கு மாற்றி வைக்கப்படுகிறது. அன்றைய தின விசாரணைக்கு மேல்முறையீட்டாளரும், உரிய பொதுத் தகவல் அலுவலரும் தவறாமல் ஆஜராகக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மறுவிசாரணை தேதி மற்றும் நேரம் பின்னர் அறிவிக்கப்படும்.

ஒம்/- (ச.த. தமிழ்குமார்)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

<u>வழக்கு எண். SA3830/F/2020</u>

**பெறுநர்**

**பொதுத் தகவல் அலுவலர்/ கிளை மேலாளர்,**
**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்**
**(கோயம்புத்தூர்) லிமிடெட்,**
**எண்.37, மேட்டுப்பாளையம் சாலை,**
**கோயம்புத்தூர் - 642 043.**

<u>மனுதாரர்</u>

**திரு கு.பாலதண்டபாணி,**
**எண்.180/215, காந்திபுரம்,**
**தாராபுரம் - 638 656.**
**திருப்பூர் மாவட்டம்.**

Copy to: Judgement File.
SM/ PC-17.11.2020